# BRAMPTON Service and Information Update

**வெப்ப எச்சரிக்கையின்போது குடியிருப்புவாசிகளை குளிர்ச்சியாக வைத்திருக்க ப்ராம்ப்ட்டன் நகரம் சிறுகுறிப்புகளை வழங்குகிறது.**

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 29, 2021) – இன்றைய தினம் பீல் பிராந்தியம் விடுத்த வெப்ப எச்சரிக்கையைத் தொடர்ந்து, தங்களை குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் குடியிருப்புவாசிகளுக்கு நினைவூட்டுகிறது.

நகரின் ஸ்ப்ளாஷ் பேட் செயல்புரியும் நேரங்கள் தினமும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையும், சிங்க்வாகவ்ஸியில் உள்ள குழந்தைகள் நீரில் அளைந்து விளையாடும் குளங்கள், காலநிலை அனுமதிக்கும் பட்சத்தில், தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரையும் திறந்திருக்கும். புரொஃபெஸ்ஸர்ஸ் லேக் பீச் மற்றும் எல்டோரடோ பார்க் திறந்தவெளி குளம், காலநிலை அனுமதிக்கும் பட்சத்தில் மற்றும் நீர் இருக்கும் நிலைமையைப் பொருத்து  நாளை ஜூன் 30 ஆம் தேதி திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குளங்கள் மற்றும் ஸ்ப்ளாஷ் பேட்களுக்கு வருகை தரும்போது, குடியிருப்புவாசிகள் தங்கள் உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை மனதில் ஆழமாக இருத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உடல்ரீதியாக விலகி இருக்கவும்,  அது முடியவில்லை என்றால் முகக் கவசம் அணியவும். ஸ்ப்ளாஷ் பேட்கள் மற்றும் குழந்தைகள் நீரில் அளைந்து விளையாடும் குளங்களுக்கான முழு பட்டியலுக்கு வருகை தரவும்: www.brampton.ca.

வெப்பத்தைத் தணிக்க ப்ராம்ப்ட்டன்வாசிகள் பின்வரும் சிறு குறிப்புகளை மனத்தில் வைத்துக் கொள்ளலாம்:

**திறந்தவெளி செயல்பாடுகளைக் குறைக்கவும்**
குடியிருப்புவாசிகள் திறந்தவெளி செயல்பாடுகளைக் குறைத்துக்கொள்ள ஊக்கமளிக்கப்படுகிறார்கள். வெய்யிலில் அதிக நேரம் இல்லாமல் இருத்தல், ஏராளமான தண்ணீர் குடித்தல் மற்றும் குளிரூட்டப்பட்ட இடங்கள் அல்லது நிழலான பகுதிகளில் இருத்தல் ஆகியவற்றுக்கு  ஊக்கமளிக்கப்படுகிறார்கள்.

**ஆபத்தில் சிக்கக் கூடிய தனி நபர்கள்**
மூத்த குடிமக்கள் மற்றும் இளம் குழந்தைகள்தான் குறிப்பாக  ஆபத்துக்கு ஆட்படுவார்கள் மற்றும் இப்படி ஆட்பட்டுவிடலாம் என தாங்கள் நினைக்கின்ற நன்பர்கள் மற்றும் குடும்பத்தினரை மெய்நிகராக அல்லது தொலைபேசி வழியாக அவ்வப்போது அவர்களின் நலன் விசாரிக்க ஊக்கமளிக்கப்படுகிறார்கள்.

**செல்லப்பிராணிகள்**
செல்லப்பிராணிகளை குளுமையாக வைத்துக்கொள்வதற்கான சிறு குறிப்புகள்:

- உங்கள் செல்லப்பிராணிகளை நடப்பதற்காக வெப்பமாக இருக்கும் வெளிப்புறங்களுக்கு அழைத்துச் செல்லவேண்டாம் மற்றும் கட்டிடங்களுக்கு உள்ளாகவே வைத்திருக்கவும் - வெறும் காலால் நாம் நடக்கவே முடியாத உஷ்ணம் இருக்கும் நடைபாதைகள், செல்லப்பிராணிகளின் பாதங்களுக்கு மிக மிக உஷ்னமாக இருக்கும்.
- ஏராளமான தண்ணீர் கொடுக்கவும்
- வீடுகளின் உள்ளாக காற்றோட்ட வசதி செய்யவும்
- வெய்யிலில் இருக்கும் நேரத்தைக் குறைத்து நிழல் ஏற்படுத்தவும்

அதிக வெப்பான நிலையில், குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை கவனிப்பாரற்று வாகனங்களில் தனித்து விடாதீர்கள்.

**தண்ணீரில் பாதுகாப்பாக இருக்கவும்**
நீர்நிலை அருகில் பாதுகாப்பாக விளையாடுமாறு குடியிருப்புவாசிகளுக்கு நினைவூட்டப்படுகிறது:

- நீரில் இருக்கும்போது குழந்தைகளை எப்போதுமே கைக்கெட்டும் தூரத்தில் வைத்திருங்கள்
- ஒருபோதும் தனித்து நீந்த வேண்டாம்
- கொல்லைப்புற குளங்களில் நான்கு பக்கமும் வேலிகள் அமைத்து உள் நுழைவதைக் குறைக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும்
- குளங்களில் அல்லது கடற்கரைகளில் இளம் குழந்தைகளை விடும்போது அவர்களுக்கு உயிர்காப்பு கவசம் அணிவிக்கவும்
- உயர்காப்புக்கான கண்காணிப்பு கொண்ட கடற்கரைகள் மற்றும் நீச்சல்குளங்களையே தேர்வு செய்யவும்
- உபயோகத்தில் இல்லாதபோது, கவனம் கொடுக்கப்படாத குழந்தைகள் அளைந்து விளையாடும் குளங்கள் மற்றும் பக்கெட்டுகளைக் காலி செய்துவிடவும்
- உங்களுக்கென தனி குளம் அல்லது குடில் இருக்குமானால், உயிர்காக்கும் திறமைகளை குடும்ப உறுப்பினர்கள் கற்றுக்கொள்வதை உறுதி செய்யவும்

வெப்பத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வது பற்றிய மேலும் தகவல்களுக்கு, வருகை தரவும்: www.brampton.ca மற்றும் www.peelregion.ca

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca